ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේஷமானது

අංක 1823/68 - 2013 අගෝස්තු මස 16 වැනි සිකුරාදා - 2013.08.16

*1823/68 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

**ஐஸ், வளி ஊட்டப்பப்பட்ட நீர் வகை, பழரசம், ஜாம் உற்பத்தித் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஐஸ், வளி ஊட்டப்பப்பட்ட நீர் வகை, பழரசம், ஜாம் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத் தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.*

*டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,*
*செயலாளர்,*
*தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.*

*கொழும்பு 5,*
*2013, ஓகத்து 08.*

**அட்டவணை**

ஐஸ், வளியூட்டப்பட்ட நீர் வகை, பழரசம், ஜாம் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1963 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் தேதிய 13535 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதிய 1664/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமானதீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பாகம் II**

*நிரல் I*

**வேலையாளர்களின் வகுப்பு**

**தரம்** I

பிரதான ஐஸ்கிறீம்/பழரசம்/ஜாம் தயாரிப்போர் (இயற்கையானதும் செயற்கையானதுமான சாறினை இட்டு), கங்காணிமார், தலைமைப் பாணி தயாரிபோர், நீர் வடித்தற் பொறித் தொகுதி இயக்குநர்கள், தகரப்புட்டி ஆக்குநர்கள், தச்சர், நிரப்புநர் (துன்னியக்க), செவ்வை பார்ப்போர்.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**தரம்** II

உதவி ஐஸ்கிறீம்/பழரசம்/ஜாம் தயாரிப்போர் (இயற்கையானதும் செயற்கையானதுமான சாறினை இட்டு) இத் தொழிலுக்குரிய பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள வேறு தொழிலாளர்கள், தகரப்புட்டி பழுதுபார்ப்போர், கார்பன்டை ஒக்சைட் வாயுக் கட்டுப்பாட்டாளர், உதவி பாணி தயாரிப்போர், பணியாளர்கள், மூடியிடுநர், போத்தல் துப்பரவு பரிசோதகர்கள், கார்பனேட்டர் இயக்குநர்கள், உற்பத்தி எண்ணுவோர், நிரப்புநர் (கையால்), கட்டுத் துண்டிடுவோர் (தன்னியக்க), போத்தல் கழுவுநர், கனிப்பொருள் அல்லது வளியூட்டப்பட்ட நீர் வகை உற்பத்தியின் தன்னியக்க எந்திரங்களில் ஈடுபட்டுள்ள வேறெவரேனும் வேலையாளர்கள், பனிக்கட்டி அறுப்போர்.

**தரம்** III

ஐஸ்கிறீம்/பழரசம்/ஜாம் புட்டிகளில் நிரப்புநர், ஐஸ்கிறீம்/பழரசம்/ஜாம் களஞ்சியப்படுத்துநர், ஐஸ் களஞ்சியப்படுத்துநர், ஐஸ் பொதியிடுவோர், ஐஸ் ஏற்றுநர், பாணியறைத் தொழிலாளர்கள், போத்தல் பொதி அவிழ்ப்போர், போத்தல் பிரித்து வைப்போர் அல்லது சுத்திகரிப்போர், போத்தல் கழுவி ஏற்றுவோர், பெட்டி நிரப்புநர், போத்தல் பொதியிடுவோர், சுத்திகரிப்போர் அல்லது பெருக்குவோர், போத்தல் கையால் சுத்திகரிப்போர், பெட்டி காவுநர் அல்லது அடுக்குநர், பண்டகசாலைத் தொழிலாளர்கள், கட்டுத் துண்டிடுவோர் (கையால்), வானில் ஏற்றுவோர்.

*கொடுக்க வேண்டிய ஆகக் குறைந்த சம்பள வீதம்*

| ஊழிய ஆண்டு | வகுப்பு I<br>ரூ. ச. | வகுப்பு II<br>ரூ. ச. | வகுப்பு III<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,125.00 | 9,720.00 | 9.315.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,275.00 | 9,845.00 | 9.415.00 |
| 3 ஆம் ஆண்டு | 10,425.00 | 9,970.00 | 9,515.00 |
| 4 ஆம் ஆண்டு | 10,575,00 | 10,095.00 | 9,615.00 |
| 5 ஆம் ஆண்டு | 10,725.00 | 10,220.00 | 9,715.00 |
| 6 ஆம் ஆண்டு | 10,875.00 | 10,345.00 | 9,815.00 |
| 7 ஆம் ஆண்டு | 11,025.00 | 10,470.00 | 9,915.00 |
| 8 ஆம் ஆண்டு | 11.175.00 | 10,595.00 | 10.015.00 |
| 9 ஆம் ஆண்டு | 11,325,00 | 10,720.00 | 10.115.00 |
| 10 ஆம் ஆண்டு | 11,475.00 | 10.845.00 | 10.215.00 |
| 11 ஆம் ஆண்டு | 11,625.00 | 10,970.00 | 10,315.00 |
| 12 ஆம் ஆண்டு | 11,775.00 | 11,095.00 | 10,415.00 |
| 13 ஆம் ஆண்டு | 11,925.00 | 11,220.00 | 10,515.00 |
| 14 ஆம் ஆண்டு | 12,075.00 | 11,345.00 | 10,615.00 |
| 15 ஆம் ஆண்டு | 12,225.00 | 11,470.00 | 10,715.00 |
| 16 ஆம் ஆண்டு | 12,375.00 | 11,595.00 | 10,815.00 |
| 17 ஆம் ஆண்டு | 12,525.00 | 11,720.00 | 10,915.00 |
| 18 ஆம் ஆண்டு | 12,675.00 | 11,845.00 | 11,015.00 |
| 19 ஆம் ஆண்டு | 12,825.00 | 11,970.00 | 11,115.00 |
| 20 ஆம் ஆண்டு | 12,975.00 | 12,095.00 | 11,215.00 |
| 21 ஆம் ஆண்டு | 13,125.00 | 12,220.00 | 11,315.00 |
| 22 ஆம் ஆண்டு | 13,275.00 | 12,345.00 | 11,415.00 |
| 23 ஆம் ஆண்டு | 13,425.00 | 12,470.00 | 11,515.00 |
| 24 ஆம் ஆண்டு | 13,575.00 | 12,595.00 | 11,615.00 |
| 25 ஆம் ஆண்டு | 13,725.00 | 12,720.00 | 11,715.00 |

*8- 1062*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.